உ

சிவமயம்



வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு.சின்னர் ஆறுமுகம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

08.12.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவுடன்...



அன்னையின் மடியில்
10.06.1940

ஆண்டவன் பிடியில்
08.11.2011

அமரர்

# திரு.சின்னர் ஆறுமுகம்

அவர்களின்

## திதி வெண்பா

முத்தமிழ் கரவாண்டு மிளிர்ந்திடும் ஐப்பசித்
திங்கள் சித்தமாய் அமர்ந்த பூர்வபக்கத்து
திரதிதி நன்நாளில் உத்தமராம் சின்னர்
ஆறுமுகம் உயிர் நீத்த நன் நாள் அன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும்,

வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு.சின்னர் ஆறுமுகம்

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவு மலர்

**08.12.2011**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது நல்வாழ்விற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு தன் ரத்தத்தை வியர்வையாக்கி உறக்கத்தை கனவாக்கி எம் உயர்விற்காக அரும்பாடு பட்டு மெழுகுவர்த்தி போல் தன்னை உருக்கி பிறர்க்கு ஒளிகொடுப்பது போல் எமது உயர்விற்காக தன்னை ஈந்தளித்த எங்கள் அன்புத் தெய்வம் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சென்று விட்டார். அன்னாரை இதயக் கமலத்தில் நிறுத்தி நெஞ்சுருகக் கண்ணீர் சிந்தி, நெய் விளக்கேற்றிடும் இவ்வேளையில் அன்னாரின் பிரிவு குறித்து வெளியிடப்படும் இவ் நினைவு மலரை அவரது பாதார விந்தங்களில் வைத்து சமர்ப்பணம் செய்கின்றோம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் சைவ மரபில் வந்துதித்தவரும்
பிரபல சமூகத் தொண்டனும்
ஆலயங்கள், பாடசாலைகள்,
கிராமங்கள் ஆகியவற்றின்
வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு
வந்தவரும் வரணி இயற்றாலையில்
பிறந்து வளர்ந்து வந்தவருமான
அமரர்

# சின்னர் ஆறுமுகம்

அவர்களின்
பிரிவு குறித்த 31ஆம் நாள்

# நினைவு மலர்

## 08.12.2011





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும் ஸஹிவர்ணம் சதுர்புஜம்
ப்பிரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே

### விநாயகர் துதி

பிடியதன் உருவமை கொளமிகு கரிய
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகன பதிவர அருளினர் மிககொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

### தேவாரம்

தந்தயார் போயினார் தாயாரும்
போயினர் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்ய லாம்
மையல் கொண்டஞ்சல் நெஞ்சே

### திருவாசகம்

உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்துறையுங் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பானித் திருவே
ஐயா நீயுலாப் போந்தவன்று முதலின்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத்திரைலோகிய சுந்தரனே

### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
“பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீழிருக்க” என்றார்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்

பக்தர் குறை தீர்க்கும் பானை
வயிற்றோன் சித்தமாய் பதி உறைந்த
மூத்த நாவலடி பிள்ளையாரை
பக்தியுடன் பலநாளும் பணிபுரிந்து
தொழுதுவந்த உத்தமனாம் எங்கள்
ஆறுமுகம் தன்னை உன்னடிக்கே
அழைத்திட்ட கஜமுகனே காத்திடுவாய்.

பொல்லா வினை அறுப்பான்
பெருங்கருணை புரிந்திடுவான்.
அல்லாத துட்டர் தன்னை அழித்தே
காத்திடுவான். எல்லா உயிர்க்கும் ஏற்ற
அருள் புரிவான். வரணி
இயற்றாலையில் பதியுறைந்த
வல்லாளன் நரசிங்கர் வாசல் தினம்
தொழுத நல்லாளன் ஆறுமுகம்
தன்னை நின்னடிக்கே அழைத்திட்டாய்
ஐயா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக வற்பா

இந்துமா ஆழியிலேயே இலங்குகின்ற முத்தாகும்.
வந்தவரை கவரும் வளமிகுந்த நாடாகும். வானம்
படிகின்ற வளமிகுந்த வரைகளையும் தானை பெற்று
தனிபெருமை தானடைந்த மணி இலங்கை நாடதிலே
அணிவீரன் சங்கிலியன் ஆண்ட வடதிசையிலே
மணிமுடிபோல் ஒளி விளங்கும் தென்மராட்சி மண்ணதிலே
தீன்சுவை மா, பலா, தெங்கு, பனை என எங்கும் நிறைந்து
எழிலுற விளங்கும் வரணி எனும் பதியின் இணையுறு
பதியாம் இயற்றாலை தன்னில் சீருடனே ஏர் பிடித்து
சிறப்புடனே வாழ்ந்து வந்த சின்னர் தானும் சிறந்த துணை
வேண்டுமென்று எண்ணி அவ்வூரிலே அன்று அழகுடனே
வாழ்ந்து வந்த வள்ளிப்பிள்ளை எனும் மெல்லிழையை
மணம் முடித்து வள்ளுவன் வழியில் இல்லறம் நடாத்தி
வாழ்ந்திடும் நாளில் பிள்ளைகளாக இப் புவி தன்னில்
சோரம் போன சிதம்பரப்பிள்ளையோடு காலம் சென்ற
சின்னாச்சி தன்னுடனே விண்ணுலகில் வாழும்
தெய்வானையுடன் இன்னும் இருக்கின்ற பாட்டுக்காரன் என
பாசமுடன் அழைக்கும் வேலுப்பிள்ளையோடு
இளையவனாய் வந்துதித்த ஆறுமுகம் தன்னை
பிள்ளைகளாய் பெற்று பெருவாழ்வு வாழ்நாளில் ஆறுமுகம்
தானும் தாய்மடி தவழ்ந்து தத்தி நடை பயின்று யா/வரணி
மகா வித்தியாலயத்தில் கல்விதனை கற்றேகி
நல்லிளந்தாரியாய் நடைபயிலும் நாளில் அன்னவனை
பெற்ற தந்தை பிரிந்திடவே ஆறா துயரடைந்த
ஆறுமுகம் தானும் எல்லாம் அவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் என எண்ணி மனம் நினைந்து இன்னும் பல பணிகள் இம்மண்ணில் புரிந்து வரும் நாளில் ஆறுமுகம் தன்னில் அழகுமுகம் கண்டு உளமகிழ்ந்த அன்னையவள் அன்னவன் தனக்கு அருந்துணை வேண்டுமென்று எண்ணி வாழ்வீசி பண்டாரவன்னியன் தாழ்பணியாது ஆண்டு வந்த வன்னி மணி திரு நாட்டின் நன்னகர் கரைச்சி நவீன கிளிநொச்சியில் சென்னல் மிக விளையும் சிறந்த கண்டாவளையில் விருத்தியுடன் இங்கு விவசாயம் செய்து வாழ்ந்த சுப்பு சின்னப்பிள்ளை தம்பதியர் காதலோடு பெற்றெடுத்த சின்னாச்சி தன்னை ஆறுமுகம் தனக்கு அரிய துணை என்றெண்ணி பெற்றவர்கள் மணம் பேசி பெரியவர்கள் நாள் பார்த்து கற்றவரும் மற்றவரும் வந்திருந்து வாழ்த்துரைக்க மதவழி தவறாது மணமது முடித்து வைத்து மகிழ்ந்தனர், உடன் பிறந்தோர்.

சின்னாச்சி தன்னை சிறப்புடனே கைபிடித்த ஆறுமுகம் தானும் அன்புடனே இல்லறம் இனிதாய் நடத்தி வரும் நாளில் பண்ணிய பயனின் புண்ணிய பேறாய் பிள்ளைகள் மூவரை பெற்றார் இப்புவியில். மட்டிலா மகிழ்ச்சியோடு மாடு மனை வீடு தன்னுடன் மகிழ்வுடனே வாழ்நாளில் புளியம்பொக்கணை தன்னில் காடு வெட்டி களனி ஆக்கி உழவு இயந்திரம் வைத்து உழவு தொழில் செய்து வரும் நாளில் கண்ணீறுபட்டது போல் கை பிடித்த மனைவி தன்னை காலன் பறித்திடவே கதிகலங்கி மதியிழந்து கலங்கி வாழும் நாளில் இளையவனாய் பிறந்த எம்மருமை சகோதரனுக்கு இந்த நிலை வந்ததோ என ஏங்கிய சகோதரர்கள் பிள்ளை தனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க பெருந்துணை வேண்டுமென்று எண்ணி இல்லறமே வேண்டாம் என இருந்த ஆறுமுகத்திற்கு நல்ல பல வழி சொல்லி நானிலத்தில் வாழ வைக்க இயற்றாலை தன்னில் இன்பமுடன் வாழ்ந்து வந்த முருகன் சின்னப்பிள்ளை தம்பதியினர் வரமிருந்து பெற்றெடுத்த பார்வதிப்பிள்ளை தன்னை மறுமணம் செய்து வைத்து மகிழ்ந்தனர். உறவுகள் பார்வதிப்பிள்ளையோடும் பெற்ற பிள்ளையோடும் பாசமுடன் வாழ்ந்த ஆறுமுகம் தானும் நேசமுடன் கூடி நெடுங்காலம் வாழ்நாளில் பிள்ளைகள் அறுவரை பெற்றனர் அவனியிலே.

ஆறுமுகம் சின்னாச்சி அன்புடனே பெற்றெடுத்த கிளி என்று அழைக்கும் சரஸ்வதிப்பிள்ளை தானும் கிளி/கண்டாவளை மகா வித்திலாயத்தில் கல்விதனை கற்றுவிட்டு சிற்றன்னைக்கு உதவியாய் அரும்பணி புரிந்து வரும் நாளில் வரணிதன்னை பிறப்பிடமாக கொண்டு பத்தன்மோட்டை தனில் பண்புடனே வாழ்ந்து வந்த பஞ்சாட்சரம் எனும் பண்பாளனை பாசமுடன் கை பிடித்து வாழ்ந்து வரும் நாளில் ஜசிந்தன் கணனித்துறை மாணவன் இந்தியா, கார்த்திகா கல்வியற் கல்லூரி மட்டக்களப்பு றஜீகா யாழ் பல்கலைக்கழகம் வர்த்தகப்பிரிவு கௌசிகன் வவு/விபுலானந்த கல்லூரி உயர்தர மாணவன் அகல்யா வவுனியா அற்பன்டிஸ் தேசிய பாடசாலை மாணவி எனும் ஐவரை பிள்ளைகளாய் பெற்று வவுனியாவில் இன்று வளமுடனே வாழ்கின்றாள். இவர் பின்னே வந்துதித்த மணி என்றழைக்கும் புஸ்பலீலாவதி தானும் கிளி/ கண்டாவளை மகா வித்தியாலயத்தில் கல்விதனை கற்றுவிட்டு இரை கடல் ஓடியும் திரவியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடு எனும் முதுமொழிக்கு அமைய அலைகடல் தாண்டி அன்னை மண்ணை விட்டேகி லண்டனில் சென்று வாழ்திடும் நாளில் வடமராட்சி தனில் வளம் கொழிக்கும் ஊராம் பருத்தித்துறை தன்னில் பார் போற்ற வாழ்ந்து வந்த சுப்பையா குழந்தைநாயகி தம்பதியினர் பாசமோடு பெற்றெடுத்த ஸ்ரீஸ்கந்தராசா தன்னை நேசமுடன் கைப்பிடித்து அபினன், பிரனயன், மயூரி என பிள்ளைகள் மூவரை பெற்று லண்டனிலே இன்று இன்பமுடன் வாழ்கிறாள்.

கொள்ளி வைக்க ஒரு பிள்ளை இல்லை என்று எண்ணி கவலை கொண்ட தம்பதியர் கல்லு வைத்த கோயில் எல்லாம் கை எடுத்து பூசை செய்தே கந்தனை நினைந்து கடும் தவம் தானிருந்து அருந்தவப் புதல்வனாய் அவனியிலே வந்துதித்தான் பாலகிருஷ்ணமூர்த்தி எனும் பண்பாளன் தானோ யா/வரணி மகா வித்தியாலயத்தில் உயர்கல்வி தனை கற்று விட்டு அன்னை தந்தையருடன் வாழ்ந்திடும் நாளில் அழகு தமிழ் தவழ்ந்து விளையாடும் அளவெட்டி தன்னில் அவனி போற்ற வாழ்ந்த இராஜரட்ணம் ஜெயலட்சுமி தம்பதியர் காலமெல்லாம் தவமிருந்து காதலோடு பெற்றெடுத்த ஜெயரூபி எனும் மெல்லிழையை கைபிடித்து யாழரசி (விதுசா) இசையாளன் (விதுசாங்கன்) அறிவுமதி (வினோசா) தானும் யா/வரணி மகா வித்தியாலய மாணவர்களோடு கேதாங்கி எனும் பிள்ளைகள் நால்வரை பிள்ளைகளாய் பெற்று ஏது குறையுமின்றி இயற்றாலையில் இன்று இன்பமுடன் வாழ்கின்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை அன்புடனே பெற்றெடுத்த
(சோதி) என்றழைக்கும் உதயசோதி எனும் உத்தமன்
தானும் யா/வரணி மகா வித்தியாலயத்தில் கல்விதனை
கற்றுவிட்டு வரணி இயற்றாலையில் வாழும் நாளில்
அன்னை மண்ணில் ஏற்பட்ட அவல நிலை கண்டு இன்னும்
இங்கே இருக்க முடியாது என்று எண்ணி லண்டனிலே
சென்று வாழ்ந்து வரும் நாளில் கண்டவர் வியக்கும்
கைதடி தன்னில் மேழி பிடித்து மகிழ்வுடனே வாழ்ந்து வந்த
முத்துலிங்கம் கமலாகனி தம்பதிகள் பாசமோடு
பெற்றெடுத்த சாமினி எனும் மெல்லிழையை தான் மணந்து
மோகனகீதன், கவீன் என்னும் பிள்ளைகளை பெற்று ஏது
குறையுமின்றி லண்டனிலே வாழ்கின்றான்.

இவன் பின்னே வந்துதித்த இனிய குணாளன் இராசேந்திரன்
தானும் யா/வரணி மகா வித்தியாலயத்தில் கல்விதனை
கற்று வரும் நாளில் காலம் செய்த கோலத்தால் காசினிலே
எமை விட்டு காலனடி சென்று விட்டான். அருந்தவப்
புதல்வியாய் அவனியிலே வந்துதித்த புஸ்பகலாதேவி
தானும் யா/வரணி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று
வரும் நாளில் சொல்லனா துயரத்தால் சொந்த மண்ணை
விட்டேகி வன்னியிலே வந்து வாழ்ந்து வரும் நாளில்
மாவீரன் பண்டாரன் வீர சொர்க்கம் அடைந்திட்ட
கற்சிலைமடுவில் குவலயம் போற்ற வாழ்ந்த செல்வராசா
மங்கையற்கரசி தம்பதியினர் மகிழ்வுடனே பெற்றெடுத்த
செல்வகுமார் எனும் சீரிய குணாளனை நல்லதுணை
என்று எண்ணி நலமுடனே கை பிடித்து துளசாஞ்சனா,
துர்க்காஞ்சனா என்னும் பிள்ளைகள் இருவரைப்
பெற்று மீண்டும் வரணியிலே மகிழ்வுடனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கிறாள். நாலவதாய் இங்கு நானிலத்தில் வந்துதித்த தயாளகுணத்தான் என்னும் தவராசா யா/வரணி மகா வித்தியாலயத்தில் கல்விதனை கற்று விட்டு தந்தைக்கு உதவியாய் வாழ்ந்து வரும் நாளில் சொந்த மண்ணில் ஏற்பட்ட சோகச் சுமை தாங்காது வன்னியிலே வந்து வாழ்ந்து வரும் நாளில் புளியம் பொக்கணையில் உழவு தொழில் செய்து உலகம் போற்ற வாழ்ந்த சின்னத்தம்பி சின்னாச்சி தம்பதியர் விருப்பமுடன் பெற்றெடுத்த சுகந்தினி தன்னை பாசமுடன் கைபிடித்து வாரகன் என்னும் பிள்ளைதனை பெற்று வரணியிலே வளமுடன் வாழ்கின்றான். ஐந்தாவதாய் இங்கே அவனியிலே போற்றுகின்ற பிரபாகரன் எனும் பண்பாளன் தானும் ஆரம்பக் கல்விதனை யா/வரணி மகா வித்தியாலயத்தில் கற்று வரும் நாளில் வீட்டோடு இடம் பெயர்ந்து வன்னியிலே அன்று வாழ்ந்து வந்த வேளையிலே கிளி/தருமபுரம் மகா வித்தியாலயத்தில் கல்விதனை தொடருகையில் எல்லா இடத்திலும் இருப்பது இயலாது என்று சின்ன வயதிலே அன்னை தந்தை மறந்து அன்னை மண்ணை விட்டேகி லண்டனிலே இன்று இன்பமுடன் வாழ்கின்றான். இளைய மகனாய் இம் மண்ணில் வந்துதித்த நிந்தகுமார் தானும் யா/வரணி மகா வித்தியாலயத்தில் கற்று வரும் நாளில் நாட்டினிலே நம்மவர்கள் பட்டபடு பாட்டாலே வீட்டோடே இடம் பெயர்ந்து வன்னியிலே வாழ்நாளில் கிளி/தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் விட்டகல்வி தொடர்கையில் அண்ணன் சென்ற வழி அதுவே சரியென்று எண்ணி சின்னவன் இவனும் அன்னை தந்தை தனைப்பிரிந்து அலைகடல் தாண்டி அன்னை மண்ணை விட்டேகி ஜேர்மனியிலே இன்று நலமுடனே வாழ்கின்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் தானும் ஏதுகுறையுமின்றி நலமுடனே வாழ்நாளில்
தன்னலம் மறந்து பொது நலநோக்கோடு நற்பணிகள் பல
புரிந்தார். இயற்றாலை கிராம அபிவிருத்தி சங்க
செயலாளராய், இம்மண் தளைத்திட அரும்பணிகள் பல
புரிந்தார். கற்ற கல்வி கூடத்தின் வளர்ச்சிக்காய் யா/வரணி
மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சபை
செயலாளராய் கல்விப்பணி புரிந்து வரும் நாளில்
வெள்ளிவிழா கொண்டாடி வியக்க வைத்தார்
அனைவரையும். புளியம்பொக்கணையில் புதுக்காடு வெட்டி
விவசாயம் செய்து வாழ்ந்து வரும் நாளில் பாம்புக்கும்
தெகிழுக்கும் பக்தர்களை காத்து வந்த சின்ன வரணியூர்
ஆனந்த பிள்ளையாரை உருவாக்கி ஆலயபணி பல
புரிந்தார். அன்னவர் பிறந்த இயற்றாலை மண்ணில்
இறையருள் வணங்கும் ஆலயங்கள் பலவற்றில்
அரும்பணிகள் பல புரிந்தார். இப்படி இவர் பணி தொடர்ந்து
வரும் நாளில் இம் மண்ணில் ஏற்பட்ட இடம்பெயர்வு
காரணத்தால் எம்மக்கள் படுகின்ற அவலநிலை கண்டு
பெருங்கவலை கொண்ட ஆறுமுகம் தானும் மனம் தளர்ந்து
சோர்வடைந்து மாறா வியாதிக்குள் தான் மாண்டு
கொண்டார். பெற்ற பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும்
மருமக்களும் பெரும்கவலை கொண்டிடவே உற்ற
துணையாய் இருப்பேன் நான் உங்களுக்கு என்று
எம்முடனே வாழ்ந்து வரும் நாளில் காலன் இவரது
கணக்கை முடிக்க எண்ணி விதி முடிந்து விட்டதனால்
கதை முடிக்க வந்த காலன் கயிற்றை வீசிடவே
08.11.2011 நன்னிய செவ்வாயில் நலமுடன் கூடிய திரு
திதிய பரணி நஷ்சத்திரத்தில் மண்ணை மறந்து
மக்களை மறந்து சென்றார். சிவனடிக்கே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் புலம்பி அழுதிடவே
கட்டிய மனைவி கதறி அழுதிடவும் மருமக்கள் இங்கு
மண்மீது புரண்டு அழவும் இன்னும் இவரது இன சனமாய்
இம்மண்ணில் வந்துதித்த மைத்துனர்களாம் நல்லையா
தானும் கதறி அழுதிடவும் கண்ணியவான் கணபதிப்பிள்ளை
லண்டனிலே செய்தி கேட்டு கதறி அழுதிடவும் பின்லாந்தில்
வாழ்கின்ற கிருஷ்ணபிள்ளை புலம்பி அழுதிடவும்
மைத்துனிகளாய் இங்கு மண்மீது வந்துதித்த
வள்ளிப்பிள்ளையோடு சீரிய குணாளி செல்லம்மா
தன்னுடனே நெல்லிழையாள் வள்ளிப்பிள்ளையோடு
சீதேவிப்பிள்ளை தன்னுடனே சிற்றிடையாள்
சரஸ்வதிப்பிள்ளையும் அழுது புலம்பிடவும் மருமக்களாய்
இங்கு மண் மீது வந்துதித்த சின்னம்மா தன்னுடனே
சுந்தரகுணத்து சுப்பிரமணியம் தன்னுடன்
வள்ளிப்பிள்ளையோடு சின்னமணியும் அழுது புலம்பிடவும்
பெறாமக்களாய் இங்கு இப்புவி மீது வந்துதித்த வேலவனின்
நாமம் கொண்ட தங்கவேலு இந்தியாவில் ஏங்கி அழுதிடவும்
இவன்தம்பி வேல் அழகன் லண்டனில் இருந்து வந்து
அருகிருந்து அழுது புலம்பிடவும் இவ்வூரில் வாழ்கின்ற
உதயவேல்முருகன் அழுது புலம்பிடவும், இவன் தம்பி
ஸ்ரீவேல்முருகன் ஜேர்மனியில் செய்தி கேட்டு புலம்பி
அழுதிடவும், ஸ்ரீவள்ளியம்மை ஜேர்மனியில் செய்தியறிந்து
புலம்பி அழுதிடவும் சின்னராசா தானும் அருகிருந்து புலம்பி
அழுதிடவும் இவன் சோதரிகளாம் இராஜேஸ்வரி,
புவனேஸ்வரி அழுது புலம்பிடவும் மனைவி வழி வந்த
பெறமக்களாய் இங்கு மண் மீது வந்துதித்த
லண்டனிலே வாழும் குலசிங்கம் குலுங்கி
அழுதிடவும், பாலசுப்பிரமணியம் தன்னுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கரன், கிருபாகரன், லோகேஸ்வரன், இந்திரஜித் லண்டனிலே செய்தி கேட்டு அழுது புலம்பிடவும், பரமேஸ்வரன், குகதாசன் பிரான்சினிலே புலம்பி அழுதிடவும் இராசேந்திரம் சுவீசில் அழுது புலம்பிடவும் இவ்வூரில் வாழ்ந்து வரும் பாலேந்திரன், தமயந்தி, நிசோபா, செந்தூரன், அருகிருந்து அழுது புலம்பிடவும், அயலும் சுற்றமும் அழுது புலம்பிடவும் மண்ணை மறந்து மக்களை மறந்து விண்ணுலகில் வாழுகின்ற அன்னை தந்தையோடும் மறந்து ஆசை துணைவியோடும் அன்பான மகனுடனும், சகோதர சகோதரிகளுடனும் கூடிவாழ எண்ணி இவ்வுலகை விட்டு சென்றார் சிவனடிக்கே!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஆக்கம்:
கண்டாவளை காசிமணியம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது விடயங்கள்

## சில கணியங்களும் அவற்றின் சர்வதேச அலகும்

01. விசை, நிறை - N (நீயூட்டன்)
02. வேலை, சக்தி - J (யூல்)
03. திணிவு - kg (கிலோகிராம்)
04. தூரம் - m, km
05. நேரம் - s,h
06. ஆர்முடுகல் - $ms^{-2}$
07. வேகம் - $ms^{-1}$
08. தன்வெப்பக் கொள்ளளவு - $J/kg^oC$
09. கதி - ms-1
10. இடப்பெயர்ச்சி - m
11. அமுக்கம் - $Nm^{-2}$/Pa
12. அதிர்வெண் - Hz (ஹேட்ஸ்)
13. வலு - W (வாற்று)
14. மின்னோட்டம் - A (அம்பியர்)
15. அழுத்த வேறுபாடு - V (வோல்ற்)
16. தடை - $\Omega$ (ஓம்)

## மின்னோட்டத்தைக் கணிப்பதற்கு பயன்படும் சில சமன்பாடுகள்

01. $V = IR$

02. $H = VIt$

03. $H = \frac{V^2t}{R}$

04. $H = I^2Rt$





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 ஆண்டு காலம் நலமுடன் வாழ

| | | |
|---|---|---|
| 01. | வரட்டு இருமலுக்கு | - திராட்சை |
| 02. | முதுகுத்தண்டு வலிக்கு | - பப்பாளி |
| 03. | இரத்த அழுத்தம் குறைய | - எலுமிச்சை |
| 04. | மூளைக்கு வலுவூட்ட | - வல்லாரை |
| 05. | காது மந்தம் நீக்க | - தூதுவளை |
| 06. | சலகடுப்பு போக | - பசளைக் கீரை |
| 07. | பித்த மயக்கம் தீர | - புளியாரை |
| 08. | உடற்சூடு தணிய | - முருங்கக் கீரை |
| 09. | நீரிழிவு நோய்க்கு | - துளசிக்கீரை, வெந்தயம் |
| 10. | இரத்தம் சுத்திகரிக்க | - வெள்ளைப்பூடு |
| 11. | கண்பார்வை அதிகரிக்க | - கரட், புதினா, ஏலக்காய் |
| 12. | கடுமையான ஜலதோசத்திற்கு | - தேனும் எலுமிச்சையும் |
| 13. | வாழ்நாளை நீடிக்க | - நெல்லிக்கனி |
| 14. | கொழுப்பைகுறைக்க | - மிளகு |
| 15. | பொடுகை போக்க | - தயிரின் குளி |
| 16. | காது வலிக்கு | - எலுமிச்சைச்சாறு நாலுதுளி |
| 17. | மூல நோக்கு | - கருணைக்கிழங்கு |
| 18. | இதய பலவீனத்திற்கு | - மாதுளை |
| 19. | வெள்ளை வேட்டைக்கு | - அன்னாசி |
| 20. | பீனிசம் தலைவலி நீங்க | - மிளகு பொடியுடன் வெல்லம் சேர்ந்து உண் |
| 21. | நோய் தணிந்து உடல் தேற | - பொன்னாங்காணி |
| 22. | சிறுநீராக கற்களுக்கு | - வாளைத்தண்டு |
| 23. | பேதியை நிறுத்த | - மாதுளை |
| 24. | கருப்பை நோய்க்கு | - வாழைப்பூ |
| 25. | மூளைக்கு வலுவூட்ட | - பேரிச்சம்பழம், பாதாம்பருப்பு |
| 26. | கால் ஆணி போக | - மருதோன்றி, வேப்பம்பட்டை அரைத்தும்பூசவும் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

- சரியான வழியில் சந்தோஷம் அடைய வைக்காத கல்வி வீண் - **ரஷ்கின்**

- நாடுகளுக்கு மலிவான பாதுகாப்பு கல்வி - **புல்லர்**

- கல்விதான் நமக்குரிய அரசியல் பாதுகாப்பு
  - **ஹொரேஸ்மியன்**

- கல்வித்துறை சிறந்து விளங்கும் நிலை ஏற்பட வேண்டுமாயின் ஒவ்வொரு ஊரிலும் நூல் நிலையம் மிகச் சிறந்த கட்டடமாக விளங்க வேண்டும்.
  - **திரு.வி.க**

- கற்க வேண்டியவற்றையும், கற்றவற்றையும் கருத்தில் வைப்பவனே கல்வியில் விருப்பமுள்ளவன்.
  - **கன்பூஷியஸ்**

- கல்வி என்பது ஐயம் திரிபர அறிந்து கொள்வது
  - **யாரோ**

- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வி கற்பிப்பதை விட வேறொரு மேலான வெகுமதி அளிக்க முடியாது - **காந்திஜி**

- கல்வி என்பது தெரியாததை தெரியச் செய்வதன்று ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதாகும். கல்வியின் நோக்கம் பொருளை அறிவது மட்டும் அன்று வேலைக்கு அடிப்படை அமைப்பதும் அன்று, பெருந்தகையாளனாகவும் பேரறிஞனாகவும் செய்வதாகும் - ரஸ்கின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்விவேறு, படிப்பு வேறு கல்வியானது புத்தி ஆத்மா சிறப்பு பெற சீர்பட்டு நிற்பது வெறும் எழுதப்படிக்க தெரிந்திருப்பது மட்டும் அதை தந்து விடாது. தண்ணீர் மட்டும் ஆகாரமாகி விடாது. ஆனாலும் அவசியமானது தான். ஆயினும் அதைவிடவும் அவசியமானது உணவு. அதைப்போலவே எழுதப் படிக்க தெரிந்தது மட்டும் கல்வியைப்பெற்றதாகாது - **ராஜாஜி**

- புத்திசாலிகள் எப்போதும் எண்ணிக்கையில் குறைவுதான் - **வால்டேர்**

- பலம் பொருந்திய 100 கைகளை விட ஒரு நல்ல மூளையே சிறந்தது - **எடிசன்**

- பட்டங்கள் மட்டும் உன்னை உயர்த்தாது உன் நடத்தை தான் உன்னை உயர்த்தும்
  - **ஹென்றிபோர்**

- குறைந்த செலவில் நாடுகளை தற்காப்பு செய்து கொள்ளும் முறையே கல்வி - **எட்மன்ட் பர்க்**

- இளமையில் கல் - **ஔவையார்**

- கல்வி இருளை நீக்கி ஒளியைக் காட்டும் - **தாகூர்**

- பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றுத்தரப்படுவது கல்வி அல்ல, கல்வி கற்பதற்கான வழிமுறையே ஆகும்.
  – ராபர்ட்பிராஸ்ட்

- பொதுக்கல்வியே அரசாங்கத்தின் முதல் லட்சியமாக இருக்க வேண்டும்
  - நெப்போலியன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுக்க நெறியின் வளர்ச்சியே கல்வியின் நோக்காக இருக்க வேண்டும் - **ஓசோ**

- வாழ்க்கைக்கு பயிற்சி பெறுவதுதான் கல்வி – **விப்மாட்**

- சரியான நோக்கத்தில் கல்வி பயிற்சி பெறுகிற வரை மனிதன் மனிதனாகமாட்டான் - **H.மான்**

- ஒழுக்க விஷயங்களைப் பற்றி கற்பித்தல் மிக அவசியம் - **ரூஸ்வெல்ட்**

- பூரண அறிவுக்கு அடையாளமாக உள்ளது கற்பிக்கும் ஆற்றல் - **அரிஸ்டாட்டில்**

- எடுத்தால் குறைவது செல்வம் கொடுத்தால் வளர்வது கல்வி – **ஜான் பர்ரோஸ்**

- அறிவை மேன்மேலும் கூர்மையாக்கிக் கொள்ள பயன்படும் கருவி கல்வி – **யங்**

- அறிவை வளர்க்காத கல்வி இரண்டு பங்கு மதியீனத்திற்கு சமம் - **ஓர் அறிஞர்**

- கல்வியின் ரகசியம் கவனம். கவனம் மன அமைதி உடையவர்க்கும், மன அமைதி கடவுளை வழிபடுகிறவர்களுக்கும் கிடைக்கிறது. – சா.கந்தசாமி

- கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே நிகழ்காலம் - தாமஸ் புல்லர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TIME

| | |
|---|---|
| Moment | கணப்பொழுது |
| Second | விநாடி |
| Minute | நிமிடம் |
| Hour | மணித்தியாலயம் |
| Day | நாள் |
| Day – To – Day | அன்றாடம் |
| Daytime | பகல்பொழுது |
| Night Time | இரவுப்பொழுது |
| Today | இன்று |
| Yesterday | நேற்று |
| Tomorrow | நாளை |
| Day Before Yesterday | நேற்றுமுன்தினம் |
| Day After Tomorrow | நாளை மறுதினம் |
| Night | இரவு |
| Midnight | நள்ளிரவு |
| Tonight | இன்றிரவு |
| Noon | நண்பகல் |
| Afternoon | மதியம் |
| Dawn | அதிகாலை |
| Dusk | சூரியன் மறையும் நேரம் |
| Nightfall | சாயங்காலம் |
| Alternate Day | ஒன்றுவிட்டநாள் |
| The Present | தற்போது |
| Week | கிழமை |
| Midweek | வாரநடுப்பகுதி |
| Week Days | வாரநாட்கள் (திங்கள்-வெள்ளி) |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Weekends | வார இறுதி நாட்கள் (சனி-ஞாயிறு) |
| Alternate Week | ஒன்று விட்ட வாரம் |
| Couple Of Weeks | சில வாரங்கள் |
| Fort Night | இரண்டு வார காலம் |
| Year | ஆண்டு |
| Decade | தசாப்தம் / பத்தாண்டு |
| Millennium | ஆயிரமாண்டு |
| Era | யுகம் |
| Epoch | சகாப்தம்/விசேடகாலம் |
| New Year | புதுவருடம் |
| Stone – Age | கற்காலம் |
| Ancient Time | ஆதிகாலம் |
| Century | நூற்றாண்டு |

## WEDDING

| | |
|---|---|
| Wedding | திருமணம் |
| Love Affair | காதல் விவகாரம் |
| Registration | பதிவுத் திருமணம் |
| Bride | மணமகள் |
| Bride Groom | மணமகன் |
| Bestman | மாப்பிள்ளைத் தோழன் |
| Bridal Saree | திருமணப்பட்டு |
| Wedding Saree | திருமணப்பட்டு |
| Bridal Drees | திருமண ஆடை |
| Auspicious Time | முகூர்த்த நேரம் |
| Solemnization | திருமணச்சடங்கு |
| Marriage Ring | திருமண மோதிரம் |
| Wedlock | திருமண பந்தம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Couple | சோடி/இணையர் |
| Invitation Card | அழைப்பிதழ் |
| Marriage Partner | வாழ்க்கைத் துணை |
| Marriage Broker | திருமணத்தரகர் |
| Marriage Proposal | திருமணப்பேச்சு |
| Dowry | சீதனம் |
| Donation | நன்கொடை |
| Patrimony | முதுசம் |
| Garland | மாலை |
| Holy Pendant | புனிதப்பென்ரன் (தாலி) |
| Turban | தலைப்பாகை |
| Inter Marriage | மாற்றுச்சம்பந்தம் |
| Monogamy | ஒருதார மணம் |
| Bigamy | இருதார மணம் |
| Exogamy | கலப்புத் திருமணம் |
| First Night | முதலிரவு |
| Honeymoon | தேன்நிலவு |
| Engagement | நிச்சதார்த்தம் |
| Cohabitation | கூடி வாழ்தல் |
| Remarriage | மறுமணம் |

## FUNERAL

| | |
|---|---|
| Funeral | மரணச்சடங்கு |
| Corpse | பூதவுடல் / பிணம் |
| Dead Body | இறந்த உடல் |
| Decomposed Body | அழுகிய உடல் |
| Casket Ngio | பேழை |
| Coffin | பிரேதப்பெட்டி |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Cemetery/ Grave Yard | இடுகாடு |
| Crematory / Crematorium | சுடுகாடு |
| Tomb | கல்லறை |
| Monument | நினைவுச்சின்னம் |
| Burial | அடக்கம் செய்தல் |
| Cremation | தகனம் செய்தல் |
| Tribute | அஞ்சலி |
| Floral Tribute | மலரஞ்சலி செய்தல் |
| Wreath | மலர் வளையம் |
| Silent Tribute | மௌன அஞ்சலி |
| Condolence | அனுதாபம் |
| Message Of Condolence | அனுதாபச்செய்தி |
| Obituary | மரண அறிவித்தல் |
| Remains | அஸ்தி எரிபடாத எச்சங்கள் |
| Embalm | இறந்த உடலை பதப்படுத்தல் |
| Postmortem | பிரேத பரிசோதனை |
| Autopsy | மரண விசாரணை |
| Funeral Procession | மரண ஊர்வலம் |
| Bier | சவப்பெட்டி தாங்கி/ பாடை |
| Mortuary | சவச்சாலை |
| Relic | புனித எச்சங்கள் |
| Funeral Oration | செத்த வீட்டு உரை |
| Dying Declaration | மரண வாக்கு மூலம் |
| Dirge | பாடை |
| Martyr | மாவீரன் |
| Funeral Coach | சவஊர்தி |
| Funeral Committee | மரணக்கிரியைக் குழு |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Festoon | தோரணம் |
| Funeral Rite | மரணச்சடங்கு |
| Ash | அஸ்தி (சாம்பல்) |
| Untimely Death | அகால மரணம் |
| Natural Death | இயற்கை மரணம் |
| Death Anniversary | ஆண்டு திவசம் |
| Inquest | மரண விசாரணை |
| Accidental Death | விபத்து மரணம் |
| Sudden Death | திடீர் மரணம் |
| Hearse | பிண ஊர்தி |

## CEREMONIES AND SPECIAL OCCASIONS

| | |
|---|---|
| Anniversary | ஆண்டு விழா |
| Jubilee | விழா |
| Silver Jubilee | வெள்ளி வழா |
| Golden Jubilee | பொன் விழா |
| Diamond Jubilee | வைர விழா |
| Platinum Jubilee | பவள விழா |
| Commemoration | நினைவுகூரல் |
| Memorial Day | நினைவு தினம் |
| Remembrance Day | ஞாபகார்த்த் தினம் |
| Birth Day | பிறந்த நாள் |
| Veterans Day | சேவை நலன் பாராட்டு விழா |
| Martyrs Day | மாவீரர் நாள் |
| Heros Day | வீரர்கள் தினம் |
| Day Of Mourning | துக்க தினம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Heroes Welcome | வெற்றி வீரர் வரவேற்பு விழா |
| Welcome Party | வரவேற்பு விழா |
| Party | விருந்துபசாரம் |
| Puberty Ceremony | பூப்புனித நிராட்டு விழா |
| Inauguration | அங்குராப்பணம் |
| Concert | களியாட்ட நிகழ்வு |
| Seminar | கருத்தரங்கு |
| Workshop | பயிற்சிப்பட்டறை / செயலமர்வு |
| Convocation | பட்டமளிப்பு விழா |
| Concluding Function | நிறைவு விழா |
| Reception | வரவேற்பு விழா |
| Book Launch Ceremony | நூல் வெளியீட்டு விழா |
| Celebration | கொண்டாடடம் |
| Function | வைபவம் |
| Opening Ceremony | திறப்பு விழா |
| House Warming Ceremony | புதுமனைபுகு விழா |
| Annual Function | வருடாந்த வைபவம் |
| Feast | பெருவிழா |
| Festival | கொண்டாட்டம்/ விழா |
| Pongal Festival | பொங்கல் திருநாள் |
| Deepavali festival | திபாவளி திருநாள் |
| Valentine's Day | காதலர் தினம் |
| Good Friday | பெரிய வெள்ளி |
| Christmas | நத்தார் பண்டிகை |
| Inaugural Ceremony | அங்குரார்ப் பணவைபவம் |
| Occasion | நிகழ்வு |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Hospitality | விருந்தோம்பல் |
| Festivity | கொண்டாட்டம் |
| Formality | சம்பிரதாயம் |
| Tradition | பாரம்பரியம் |
| Culture | கலாச்சாரம் |
| Cultural Festival | கலாச்சார விழா |
| Cultural hall | கலாச்சார மண்டபம் |
| Intiation | ஏடு தொடக்கல் |
| Stage | மேடை |
| Auditorium | கேட்போர் கூடம் |
| Forum | அரங்கம் |
| Welcome Speech | வரவேற்புரை |
| Vote of Thanks | நன்றியுரை |
| Keynote Address | தொடக்க உரை |
| Program of Entertainment | கலை நிகழ்வு களியாட்ட நிகழ்வு |
| Music Group | இசைக் குழு |
| Program/ Programme | நிகழ்வு |
| Debate | விவாதம் பட்டிமன்றம் |
| Speech | உரை |
| Discourse | கருத்த விளக்குதல்/ கருத்துப் பரிமாற்றம் |
| Sermon | மத போதனை |
| Audience | பார்வையாளர் |
| Applause | கரகோஷம் |
| Poet Forum | கவியரங்கம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARTS OF BODY

| | |
|---|---|
| Body | உடல் |
| Head | தலை |
| Hair | தலைமுடி |
| Crown | உச்சி |
| Face | முகம் |
| Forehead | நெற்றி |
| Temple | கன்னப்பொட்டு |
| Eyebrow | புருவம் |
| Eye | கண் |
| Eyelid | கண்மடல் |
| Eyelash | கண்இமை |
| Eyelet | கண்ணீர்த்துவாரம் |
| Eyeball | கண்மணி |
| Ear | காது |
| Earlobe | காதுமடல் |
| Nose | மூக்கு |
| Nostril | மூக்குத்துவாரம் |
| Mustache | மீசை |
| Mouth | வாய் |
| Lip | உதடு |
| Cheek | கன்னத்தாடி |
| Whiskers | நாடி |
| Chin | தாடி |
| Jay | தாடை |
| Neck | கழுத்து |
| Nape | பிடரி |
| Throat | தொண்டை |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Shoulder | தோள் |
| Joint | மூட்டு |
| Chest | மார்பு (ஆண்) |
| Breast | மார்பு (பெண்) |
| Nipple | முலைக்காம்பு |
| Belly | அடிவயிறு |
| Abdomen | அடிவயிறு |
| Navel | தொப்பிள் |
| Umbilical Cord | தொப்பிள் கொடி |
| Hand | கை |
| Armpit | அக்குள் |
| Arm | புயம் |
| Elbow | முழங்கை |
| Ulna | முன்கை அடி எலும்பு |
| Humerus | முன்கை மேல் என்பு |
| Forearm | முன்கை |
| Wrist | மணிக்கட்டு |
| Knuckle | மொளி |
| Finger | விரல் |
| Thump | பெருவிரல் |
| Index Finger | சுட்டுவிரல் |
| Middle Finger | நடுவிரல் |
| Ring Finger | மோதிரவிரல் |
| Small Finger | சின்னவிரல் |
| Nail | நகம் |
| Palm | உள்ளங்கை |
| Line On The Palm | ரேகை |
| Hip | இடுப்பு |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Waist | இடுப்பு |
| Back | முதுகு |
| Groin | கவடு |
| Buttock | பிருஷ்டம் |
| Testicle | விதை |
| Testis | விதை |
| Penis | ஆண்குறி |
| Vagina | பெண்குறி |
| Leg | கால் |
| Thigh | தொடை |
| Knee | முழங்கால் |
| Kneecap | முழங்கால் சில்லு |
| Shin | முழந்தாள் |
| Calf | பின்காலின் தசைப்பகுதி |
| Ankle | கணுக்கால் |
| Foot /Feet | பாதம் / பாதங்கள் |
| Heel | குதி |
| Toe | கால் விரல் |
| Big Toe | காற்பெருவிரல் |
| Toenail | கால்நகம் |
| Sole | உள்ளங்கால் |
| Skin | தோல் |
| Flesh | தசை |
| Muscle | தசை நார் |
| Skeleton | எலும்புக்கூடு |
| Skull | மண்டையோடு |
| Brain | மூளை |
| Bone | என்பு |
| Jawbone | தாடை என்பு |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Cheekbone | கன்ன என்பு |
| Gum | முரசு |
| Tooth / Teeth | பல் பற்கள் |
| Tongue | நாக்கு |
| Uvula | உள்நாக்கு |
| Palate | அண்ணம் |
| Collarbone | கழுத்துபட்டை என்பு |
| Shoulder Blade | தோட்பட்டை என்பு |
| Scapula | தோட்பட்டை என்பு |
| Breastbone | மார்பென்பு |
| Shinbone | கீழ்க்காலென்பு |
| Thigh Bone | தொடை என்பு |
| Backbone | முதுகென்பு |
| Spine | முள்ளந்தண்டு |
| Liver | ஈரல் |
| Heart | இதயம் |
| Blood | குருதி |
| Vein | நாளம் |
| Artery | நாடி |
| Cell | கலம் |
| Thorax | நெஞ்சுக் கூடு |
| Auricle | சோணையறை |
| Rib | விலா என்பு |
| Ventrict | இதயவறை |
| Tympanum | செவிப்பறை |
| Womb | கருப்பை |
| Incisor | வேட்டைப்பல் |
| Valve | தடுக்கிதழ் / வால்பு |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Bicuspid Valve | இருகூர்வால்பு |
| Tricuspid Valve | முக்கூர் வால்பு |
| Tonsil | அடிநாக்குச் சதை |
| Trachea | குரல்வளை |
| Windpipe | மூச்சுக்குழாய் |
| Iris | கருவிழிச்சவ்வு |
| Iens | வில்லை |
| Pupil | கண்மணி |
| Cornea | விழிவெண்படலம் |
| Retina | விழித்திரை |
| Rectum | மலக்குடல் |
| Appendix | குடல்வளரி |
| Diapjhragm | பிரிமென்தகடு |
| Gland | சுரப்பி |
| Ductless Gland | நாளமில்லாச் சுரப்பி |
| Bile | பித்தம் |
| Bile Duct | பித்தக்கால்வாய் |
| Pus | சீழ் |
| Blood Vessel | குருதிநாடி |
| Large Intestine | பெருங்குடல் |
| Small Intestine | சிறுகுடல் |
| Oesophagus | உணவுக்கால்வாய் |
| Testa Bud | சுவையரும்பு |
| Tendon | தசைநார் |
| Nerve | நரம்பு |
| Urethra | சிறுநீர்க் குழாய் |
| Trunk | முண்டம் |
| Tooth Crown | பற்சிகரம் |
| Tooth Pulp | பற்கூழ் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Gallbladder | பித்தநீர்ப்பை |
| Viscera | இதயம் நுரையீரல் முதலியவற்றின் தொகுதி |

## DISEASES

| | |
|---|---|
| Hiccup | விக்கல் |
| Cough | இருமல் |
| Faint | மயக்கம் |
| Giddiness | தலைச்சுற்று |
| Pain | வலி |
| Labour Pain | பிரசவவலி |
| Sore | வெம்புண் |
| Boil | கொப்பளம் |
| Itch | அரிப்பு |
| Swelling | வீக்கம் |
| Ache | வலி |
| Backche | முதுகுவலி |
| Rash | கரப்பன் |
| Bruise | கண்டல்காயம் |
| Fracture | எலும்பு முறிவு |
| Paralysis | முடக்கு வாதம் |
| Wound | காயம் |
| Insect Bite | பூச்சிக்கடி |
| Animal Bite | மிருகக்கடி |
| Snake – Bite | பாம்புக்கடி |
| Allergy | ஒவ்வாமை |
| Wheezing | மூச்சிரைப்பு, முட்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Asthma | தொய்வு |
| Constipation | மலச்சிக்கல் |
| Digestion | சமிபாடு |
| Indigestion | சமிபாடு இன்மை |
| Infection | நோய்தொற்று |
| Infectious Disease | தொற்றுநோய் |
| Nosebleed | மூக்கால் இரத்தம் வடிதல் |
| Sneeze | தும்மல் |
| Shortsight | குறும் பார்வை |
| Longsight | நீள்பார்வை |
| Hernia | குடலிறக்கம் |
| Diarrhea/ Diarrhea | வயிற்றோட்டம் |
| Eczema | எக்ஸிமா |
| Jaundice | மஞ்சள் காமாலை |
| Jaundiced Eye | மஞ்சள் காமாலை கண் |
| Scabies | சிரங்கு |
| Rabies | நீர் வெறுப்பு நோய் |
| Piles | மூலநோய் |
| Epilepsy | காக்கா வலிப்பு |
| Leprosy | தொழு நோய் |
| Nausea | குமட்டல் |
| Whitlow | நகச்சுற்று |
| Tuberculosis | காசநோய் |
| Insomnia | தூக்கமின்மை |
| Sore Eye | கண்நோய் |
| Earache | காது வலி |
| Headache | தலைவலி |
| Ulcer | வயிற்றுப் புண் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Vomit | வாந்தி |
| Fever | காய்ச்சல் |
| Illness | நோய்/வருத்தம் |
| Lumbago | இடுப்பு வலி |
| Mumps | கூகைக் கட்டு |
| Diabetes | நீரிழிவு நோய் |
| Cold | தடிமன் |
| Cold Fever | தடிமன் காய்ச்சல் |
| Coma | சுயநினைவு இழந்த நிலை |
| Scar | தழும்பு |
| Typhoid | நெருப்புக் காய்ச்சல் |
| Typhus | நச்சுக் காய்ச்சல் |
| Burn | எரிகாயம் |
| Chronic Disease | பலகாலமாக உள்ள நோய் |
| Blister | கொப்பளம் |
| Sprain | சுழுக்கு |
| Cramp | பிடிப்பு |
| Anaesthetic | மயக்க மருந்து |
| Anaesthesia | உணர்ச்சியற்ற நிலை |
| Lump | கட்டி |
| Abscess | சீழ் கட்டி |
| Pus | சீழ் |
| Scratch | கீறல் காயம் |
| Slit | வெட்டுக் காயம் |
| Stiff Mess | விறைத்தல் |
| Tetanus | ஏற்பு வலி |
| Minor Injury | சிறு காயம் |
| Minor Burns | எரி காயம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Side Effect | பக்க விளைவு |
| Chest Pain | நெஞ்சு வலி |
| Blood Pressure | இரத்த அழுத்தம் |
| Low Blood Pressure | தாழ் இரத்த அழுத்தம் |
| Appendicitis | குடல் மூளை அழற்சி |
| Cancer | புற்று நோய் |
| Cataract | கண்ணில் படலம் வளர்தல் |
| Colic | வயிற்று வலி |
| Cholera | வறிற்றோட்டம் |
| Stomachache | வயிற்று வலி |
| Heart Disease | இதய நோய் |
| Heart Attack | மாரடைப்பு |
| Malaria | மலேரியா |
| Plague | கொள்ளை நோய் |
| Rickets | கணச்சூடு |
| Ringworm | வட்டக்கடி |
| Smallpox | பெரியம்மை |
| Toothache | பல் வலி |
| Bronchitis | மார்புச் சளி |
| Elephantiasis | யானைக்கால் |
| Erysipelas | அக்கி |
| Felon | நகச்சுற்று |
| Scrofula | கண்டமாலை |
| Syphilis | சிபிலிசு (நோய்) |
| Gonorrhoea | பாலியல் நோய் |
| A/DS | எயிட்ஸ் |
| Sunstroke | சூரிய வெப்பத்தால் மயங்குதல் |
| Whooping Cough | கக்குவான் இருமல் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Hoarseness | தொண்டை அடைப்பு |
| Febrile Stage | காய்ச்சல் நிலை |
| Bullet Wound | துவக்குச் சூட்டுக் காயம் |
| Contusion | அடிபட்டகாயம் |
| Night Blonde | மாலைக்கண் |
| Gout | வாதம் |
| Migraine | ஒற்றைத் தலைவலி |
| Numbness | உணர்ச்சி அற்ற நிலை |
| Contraction | சுருங்குதல் |
| Bird Flu | பறவைக் காய்ச்சல் |
| Flu | குளிர் காய்ச்சல் |
| Swelling | வீக்கம் |
| Swollen Part | வீங்கிய பகுதி |
| Difficulty In Breathing | சுவாச சிக்கல் |
| Red Patches | கொப்பளங்கள் |
| Dyspepsia | கடுஞ்சமியாப்பாடு |
| Brain Tumor /Brain Tumour | மூளையில் கட்டி |

## KNOWLEDGE

| | |
|---|---|
| Ignorance | அறியாமை |
| Ignoramus | அறிவிலி |
| Wise man | ஞானி, ஞானவான் |
| Literati | எழுதப்படிக்கத் தெரிந்தவர் |
| Illiterate | எழுதப்படிக்கத் தெரியாதவர் |
| Superstition | மூட நம்பிக்கை |
| Wisdom | ஞானம் |
| Lack of knowledge | சிற்றறிவு |
| Rationalist | பகுத்தறிவாளன் |
| Intelligence | அறிவு |
| Prudence | சமயோசிதம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது தந்தையார் பாரிய நெருக்கடி காலத்தில் திடீர் சுகயீன முற்ற நாள் முதல் உதவி ஒத்தாசை புரிந்த அன்பர்கள், நண்பர்களிற்கும், அவரது மரண செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடி வந்து உதவி ஒத்தாசை புரிந்த அன்பர்கள், நண்பர்களிற்கும், அனுதாப செய்தி தெரிவித்த அன்பர், நண்பர்களிற்கும் மரணக்கிரியை நடத்தி தந்த அந்தன குருமாரிற்கும் அந்தியேட்டி கிரியையின் போது பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அன்பர்கள், நண்பர்களிற்கும் அந்தியேட்டி கிரியை நடத்தி தந்த அந்தணக்குருமார்களிற்கும் மற்றும் நன்றி பகிர்வு தவறிட்ட அனைவரிற்கும் எமது மனமார்ந்த உளம் சார்ந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

"செய்ந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்


வரணி இயற்றாலை
வரணி

FreePrintableBorders4u.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

* அமரர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை நீ இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கேயே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

பொய்கை,
பேருந்து நிலைய மேல்மாடி,
வவுனியா.

இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org